[9th November 1957

MR. SPEAKER : "ஸப் ஜுடிஸ்" என்று சொன்ன பிறபாடு நீங்கள் என்ன கேள்வி கேட்கப்போகிறீர்கள் ? பொதுக் கேள்வி வேண்டுமென்றால் கேட்கலாம்.

SRI M. KALYANASUNDARAM : இந்த மனுவில் எந்த விதமான புகார் இருந்தது ? அதை விசாரித்த அதிகாரி யார் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மனுவில் உள்ள புகார் குடிக்காதவர்களை குடித்ததாகச் சொன்னார்கள் என்பது தான். இவர்கள் குடித்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, அந்தக் கேஸ் கோர்ட்டில் விசாரணையில் இருக்கிறது. அதற்கு முன்பு இந்தப் புகாரை டி.எஸ்.பி. அவர்கள் விசாரித்து, அதில் ஆதாரம் இல்லை என்று அவர்கள் சொன்னதைத்தான் இங்கு குறிப்பிட்டேன்.

SRI N. K. PALANISAMI : புதிய மதுவிலக்கு "பாலிஸிக்குப்" பிறகு இன்றைய தினம் குடிக்காதவர்களை, பலவந்தமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டுபோய் குடிக்கச் சொல்லி மதுவிலக்கு கேஸ் போடுகிறார்கள். . . .

MR. SPEAKER : The hon. Member is not in order in giving information. He must put a question.

SRI N. K. PALANISAMI : இம்மாதிரி முறைகளை தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த முறை கையாளப் படுகிறது என்று நான் ஒப்புக்கொள்ளாதபோது, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது என்பது எழவில்லை. ஒருக்காலும் நான் இந்த முறை கையாளப்படுகிறது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது.

MR. SPEAKER : கனம் நிதி அமைச்சர் ஊரில் இல்லாததால், கேள்வி 122 திங்கள் கிழமையன்று எடுத்துக்கொள்ளப்படும்.

*Appointment of sub-postmasters as stamp-vendors*

* 123 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to question No. 68, on 6th July 1957, whether the Government have taken any decision in the matter of appointment of sub-postmasters as stamp-vendors?

THE HON. SRI M. A. MANICKAVELU : The High Court has been consulted in the matter.

A decision will be reached on receipt of its reply.

*Sulphur-producing plant*

* 124 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was a proposal to start a sulphuric acid and sulphur-producing plant at Ariyalur; and

(*b*) if so, the reason for the delay in starting the plant?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.